## கடலூர் மாவட்டத்தில் வடகிழக்கு

# பருவமழையை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேட்டி!



கடலூர், நவ.30-

கடலூர் மாவட்டம் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள அரசு நிர்வாகம் தயார்நிலையில் உள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (சர்க்கரைத் துறை) அன்பழகன் மாவட்ட ஆட்சித்தலைவர். சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்புப் பணிகள் குறித்து கடலூர் சுற்றுலா மாளிகையில் செய்தியாளர் சந்திப்பு நேற்று (29.11.2025) நடைபெற்றது

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு உயர்அலுவலர்களுக்கு அனைத்து விதமான முன்னேற்பாடு பணிகள் மற்றும் பொதுமக்களை பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை உள்ளாட்சி பிரதிநிதிகளையும் களத்திலிருந்து தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொள்ள உத்தர விட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியன்பேரில் கடலூர் மாவட்டத்தில் 22 இடங்கள் மிக அதிகமாக பாதிப்புக்குள்ளாக கூடிய இடங்களாகவும், 39 இடங்கள் அதிகம் பாதிப்புக்குள்ளாக கூடிய இடங்களாகவும், 20 இடங்கள் மிதமாக பாதிப்புக்குள்ளாக கூடிய இடங்களாகவும், 158 இடங்கள் குறைவான அளவு பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களாகவும் என 239 இடங்கள் கண்டறியப்பட்டு, அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### அடிப்படை வசதிகள் தயார் நிலை!

கனமழை ஏற்படும்பொழுது பொதுமக்களை பாதுகாப்பாக 28 புயல் பாதுகாப்பு மையங்களில் 8400 நபர்களும், 14 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களில் 15,800 நபர்களும், 191 தற்காலிக தங்கும் இடங்களில் 1,54,875 நபர்களும் தங்க வைக்கும் அளவிற்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் உள்ளது.

பேரிடர் ஏற்படும் பொழுது அப்பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை சரிசெய்திடவும், மீட்புப் பணிகள் மேற்கொள்ளவும் JCB, பொக்கலைன் இயந்திரங்கள், மரம் அறுக்கும் இயந்திரங்கள் மற்றும் தற்காலிக மின்சார தேவைக்காக ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும் மணல் மூட்டைகளும், சவுக்கு கட்டைகளும், ரப்பர் படகுகளும், 8,300 மின் கம்பங்களும், 164 கி.மீ மின் கடத்திகளும், 128 மின்மாற்றிகளும் தயார் நிலையில் உள்ளன. மீட்புப் பணிகளில் ஈடுபட தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் 35 நபர்கள், தமிழ்நாடு பேரிடர் மீட்புக்குழுவினர் 45 நபர்கள் மற்றும் மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் 60 நபர்களும் வருகைபுரிந்துள்ளனர்.

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மின்சாரம் தடையின்றி வழங்கும் வகையில் ஜெனரேட்டர் வசதிகள், 24 மணிநேரமும் சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் மருத்துவர்கள் சுழற்சி முறையில் ஈடுபட உள்ளனர். போதிய மருந்து வசதிகளும் இருப்பு உள்ளது. குறிப்பாக அடுத்த ஒரு வாரகாலத்தில் பிரசவம் மேற்கொள்ள 925 கர்ப்பிணிகள் உள்ளனர். அவர்களுக்கு மழையின் போது மகப்பேறு சிகிச்சை மேற்கொள்வதற்கான வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மழைநீர் வடிய ஏதுவாக நீர்வளத்துறை மூலம் சிறிய மற்றும் பெரிய நீர் ஆதார அமைப்புகள் தூர்வாரப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டு அவர்களையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மழைநீரினால் சூழப்பட்ட விளைநிலங்களில் உள்ள தண்ணீரினை உடனுக்குடன் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு காப்பீடு!

விவசாயிகள் அனைவரும் தங்கள் நிலங்களுக்கு காப்பீடு செய்ய 15.11.2025 வரை அனுமதிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் தற்போது காப்பீடு செய்ய 01.12.2025 வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது. மாநில அளவில் கடந்த ஆண்டு சம்பா பருவத்திற்கு சுமார் 18.05 இலட்சம் ஏக்கர் பரப்பில் 8,06,494 விவசாயிகள் தங்கள் விளைநிலங்களுக்கு காப்பீடு செய்துள்ளனர். இந்த ஆண்டு இதுவரை சுமார் 20.69 இலட்சம் ஏக்கர் பரப்பிலான விளைநிலங்களுக்கு 8,61,629 விவசாயிகள் காப்பீடு செய்துள்ளனர். கடந்த ஆண்டை விட இந்தாண்டு கூடுதல் நிலங்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. குத்தகைதாரர் விவசாயிகளும் காப்பீடு செய்யலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யூரியா, பொட்டாஷ், டிஏபி, காம்ப்ளக்ஸ் உள்ளிட்ட உரங்கள் தேவையான அளவு கையிருப்பு உள்ளது. கலப்பட உரம் விற்பவர்கள் கண்டறியப்பட்டு சட்டரீதியாக வழக்குப்பதியப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. கடலூர் மாவட்டம் பெண்ணையாறு, கெடிலம். வெள்ளாறு, பரவனாறு, கொள்ளிடம் ஆகிய 5 பெரிய ஆறுகள் கடலில் கலக்கும் வடிகால் பகுதியாக உள்ளதால் மாவட்டத்தில் தாழ்வானப் பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படாவண்ணம் படிப்படியாக பல்வேறு நிரந்தர கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக ரூ.81.12 கோடி மதிப்பீட்டில் அருவாள்மூக்கு ஒழுங்கியம் கட்டுதல் மற்றும் வெள்ளநீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணி போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. கனமழை ஏற்படும் பொழுது பரவனாற்றில் என்.எல்.சி மூலம் வெளியேற்றப்படும் சுரங்கநீரின் அளவை மாவட்ட நிருவாகத்திடம் உரிய அனுமதி பெற்று வெளியேற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணியகோட்டி, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தரராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ தலைமையில் சென்னை மண்டல பொறுப்பாளர் ஆ. ராசா எம்.பி. 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் கலாநிதி வீராசாமி எம்.பி., வட்டச் செயலாளர் வா.முத்துசாமி, மு. செல்வம், சாலை டி. கணேசன், த.ச. கரிகாலசோழன், வி.ஜி.தினகரன், துர்கா கோதண்டம், சஞ்சீவி, ஸ்ரீதர், பி. செல்வராஜ் விஜயரங்கன், ஞானமூர்த்தி, கேந்திரன் ,சுரேஷ் மற்றும் பலர் பங்கேற்றனர்.

## சென்னை மாநகராட்சியில்

# டிட்வா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## பொதுமக்கள் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுவீர்!

சென்னை, நவ.30-

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்கு பருவ மழை மற்றும் டிட்வா புயல் முன்னேச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள் புயல் மழை வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெருநகர சென்னை மாநகராட்சி வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து செய்து வருகிறது.

பெரிய ஏரிகள், குளங்கள் மற்றும் பெரிய கால்வாய்கள் ஆகியவற்றை தூர் வாரி சுத்தம் செய்யும் பணிகள் தனித்துவமான இயந்திரங்களான 2 Amphibian, 3 Amphibious Excavator, 6 Robotic Excavator, 3 Mini Amphibians போன்ற இயந்திரங்கள் மூலம் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள 37 நீர் வழி கால்வாய்கள் நவீன இயந்திரங்கள் மூலம் தூர் வாரப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 263 குளங்கள் அதன் கொள்ளவை அதிகரிக்கும் நோக்கத்தோடு புனரமைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியால் 3040 கி.மீ நீளத்திற்கு 11,770 எண்ணிக்கையில் மழைநீர் வடிகால்கள் கட்டமைக்கப்பட்டு மழைக் காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கா வண்ணம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சாலைகளில் தேங்கும் நீரை அகற்றுவதற்காக 170 எண்ணிக்கையில் 100 HP திறன் கொண்ட இயந்திர மோட்டார் பம்புகள் நீர் தேங்கும் இடங்களென கண்டறியப்பட்டு, அவ்விடங்களில் முன்னேற்பாடாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், டிராக்டர் மீது பொருத்தப்பட்ட இயந்திர மோட்டார் பம்புகள் 550 எண்ணிக்கையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1496 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.

மழைநீர் வடிகால்களில் மழைநீர் தங்கு தடையின்றி செல்வதை உறுதி செய்ய மழைநீர் வடிகால்கள் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நவீன இயந்திரம் (4000 cubic metre/hour உறிஞ்சும் திறன் கொண்ட இயந்திரம்) மூலமும், ஒப்பங்கள் மூலம் ஒப்பந்த பணியாளர்களை கொண்டும் தூர் வாரப்பட்டுள்ளது.

சாலைகளில் மழைநீர் தேங்காவண்ணம் மழைநீர் வடிகாலுக்கு செல்ல ஏதுவாக, சுமார் 1,03,000 எண்ணிக்கையில் வண்டல் மண் சேகரிக்கும் தொட்டிகள் அடைப்பின்றி சுத்தம் செய்யும் பணி அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் மழைநீர் தேக்கமின்றி போக்குவரத்து சீராக இயங்க ஏதுவாக 145 நீர் இறைப்பான்களும், தானியங்கி கண்காணிப்பு கருவிகளும் தயார் நிலையில் உள்ளன

தாழ்வான இடங்களில் மழைநீரை வெளியேற்ற 39 பம்புகளுடன் கூடிய கீழ் நிலை நீர்தேக்க தொட்டிகள் உள்ள நிலையில் புதிதாக 29 பணிகள் முடிக்க ப்பட்டுள்ளன.

51 எண்ணிக்கையிலான நீர் உறிஞ்சும் லாரிகள் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் பெறப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் 30 லாரிகள் ஈடுபடுத்தப்பட உள்ளன,

சென்னையிலுள்ள 29 ரயில்வே கல்வெர்ட்களிலும் மழைநீர் தங்குதடையின்றி செல்ல நவீன இயந்தரங்கள் மூலம் தூர்வாரப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் விழும் மரங்களை அகற்றுவதற்காக 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள், 2 சக்திமான் ஹைட்ராலிக் ஏணி, 224 கையடக்க மர அறுவை அறுப்பான், 216 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் என மொத்தம் 457 மர அறுவை இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன.

36 எண்ணிக்கையிலான படகுகள் சென்னை மாநகராட்சியால் வாங்கப்பட்டு மண்டலங்களில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. கூடுதலாக மீன்வளத் துறையுடன் ஒருங்கிணைந்து, 36 படகுகள் வெள்ள மீட்பு (ம) நிவாரண நடவடிக்கைக்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

215 நிவாரண மையங்கள் (சென்னை மாநகராட்சி பள்ளிகள், சமூக மையங்கள், கல்யாண மண்டபங்கள்) செயல்பாட்டுக்கு தயாராகவுள்ளது. மேலும் 111 சமையல் கூடங்கள் செயல்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது.

பொதுமக்களிடமிருந்து புகார்களைப் பெற 1913 புகார் பிரிவு மற்றும் கட்டுப்பாட்டு அறை 24X7 செயல்பட்டு வருகிறது.

பிளீச்சிங் பவுடர், லைம் பவுடர், பினாயில் ஆகியவை தேவையான அளவு, இருப்பு வைக்கப்பட்டுள்ளது,

சோழிங்கநல்லூர் மண்டலம் மற்றும் பெருங்குடி மண்டலத்தில் 25 நபர் மற்றும் தண்டையார்பேட்டை மண்டலத்தில் 25 நபர் கொண்ட மாநில பேரிடர் மீட்புக்குழு (SDRF) தயார் நிலையில் உள்ளனர்.

சென்னையில் 5 எண்ணிக்கையிலான தேசிய பேரிடர் மீட்புக்குழுக்கள் (NDRF) தயார் நிலையில் உள்ளன.

புயல் மற்றும் மழையின் போது முதியோர் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கும் வகையில் ஆவின் பால் பவுடர் 1 இலட்சம் பாக்கெட்டுகளும், 5 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு மற்றும் 1 லிட்டர் பாமாயில் அடங்கிய தொகுப்பு 1 இலட்சம் எண்ணிக்கையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு கீழ் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது

டிட்வா புயல் மற்றும் கனமழை காரணமாக மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் பொதுமக்கள் தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்த்து பாதுகாப்பாக வீடுகளிலேயே இருக்குமாறும் குறிப்பாக கடற்கரை மற்றும் பூங்காக்களுக்கு செல்ல வேண்டாமென்றும், மேலும் மரங்களின் கீழ் நிற்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

பொதுமக்கள் பால், குடிநீர், மெழுகுவர்த்தி மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை முன்கூட்டியே வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புயல் மழையின் போது ஆபத்தான இடங்களில் நின்று செல்ஃபி எடுப்பதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கைப்பேசி, அவசர கால விளக்குகள் (Emergency Lamps) போதிய அளவில் மின்னேற்றும் (Charging) செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாய்கள் உள்ளிட்ட செல்ல பிராணிகளை வெளியில் அழைத்து செல்வதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கட்டுமான இடங்களில் கிரேன் போன்ற கனரக இயந்திரங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைக்க அறிவுறுத்தப் படுகிறது.

தாழ்வான இடங்களில் வாழும் முதியோர் மற்றும் கர்ப்பிணிகள் பாதுகாப்பான இடத்திற்கு முன்கூட்டியே செல்லுமாறும் தேவை ஏற்படின் சென்னை மாநகராட்சியின் கட்டணமில்லா உதவி மைய எண் 1913 அணுகி சென்னை மாநகராட்சியின் நிவாரண மையங்களில் தங்கலாம் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைய வழி மற்றும் தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்கள் ஜெனரேட்டர் இயக்குவதற்கு தேவையான எரிபொருளை போதுமான அளவில் இருப்பில் வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விளம்பர பதாகைகள் அமைத்திருக்கும் நிறு வனங்கள் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி ஆபத்தான நிலையில் உள்ள பதாகைகளை உடனடியாக அகற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் – வழக்கறிஞர்

# உ.விஜயபோஸ் இல்லத் திருமண வரவேற்பு! அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்!

## அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர் – சிவ.வீ. மெய்யநாதன் – மேயர் பிரியா – தயாநிதிமாறன் எம்.பி.– என்.ஆர்.இளங்கோ எம்.பி. – முன்னணியினர் வாழ்த்துரை!

சென்னை, நவ.30-

சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் புரசைவாக்கம் வழக்கறிஞர் உ.விஜயபோஸ் - சுலோச்சனா ஆகியோரின் புதல்வி வி.அனிதா மகாளுக்கும். சென்னை பெரம்பூரைச் சேர்ந்த ஜோசப் தேவகுமாரி - ஜோ.அனிதா ஆகியோரின் புதல்வர் ஜெ.டேவிட் சாலமனுக்கும் திருமண வரவேற்பு விழா நாளை (1.12.2025 - திங்கள் கிழமை இரவு 7 மணியளவில் கீழ்ப்பாக்கம் (சி.எஸ்.ஐ. பெய்ன்ஸ் பள்ளி) கெல்லீஸ் சி.எஸ்.ஐ. லைட்டி அரங்கத்தில் நடைபெறுகிறது.

இம்மண விழாவில் ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், புரசை ஜி.தாமோதரன், ந.கலையரசன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

சொ.வேலு, வி.சுதாகர், புனிதவதி எத்திராசன், பரிதிஇளம்சுருதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், எல்.சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மண விழாவினை சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்றார்.

இம்மண விழாவில் போக்குவரத்து (ம) மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சி.வி.மெய்யநாதன், மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி., என்.ஆர்.இளங்கோவன் எம்.பி., சி.பெர்னாண்டஸ் ரத்தின ராஜா, ப.தயாகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றியழகன் எம்.எல்.ஏ., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.சந்துரு, தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், பி.ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார், கூ.பீ.ஜெயின், வானவில் விஜய், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், இசட்.ஆசாத், வே.உமாகாந்த், கோ.மணி, க.நந்திஸ்வரன், ஆர்.நிர்மலா தேவி, சாவித்திரி வீரராகவன், தி.வி.செம்மொழி, ஐ.சி.எப். வ.முரளிதரன், எ.நாகராஜன், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜன், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், எம்.தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், கே.வள்ளி, ப.சுப்புராயலு, எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்ன புரணி, எஸ்.ஜெகதீசன், வி.அயாய், தி.தயாளன், சு.மனோகரன், ந.பாலு, வி.விஜயகுமார், ஆர்.பாபு, இ.மொய்தீன், டாயிர் எஸ்.அரி, வான்மதி, கதிரவன் உள்ளிட்ட பலர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.





திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் 3000 நபர்களுக்கு மேல் நலத்திட்ட உதவிகள் மாநில மீனவரணி துணை தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வழங்கினார்.

## துணை முதல்வர் பிறந்தநாள்: மேற்கு மாம்பலத்தில்

# காக்கும் கரங்கள் இல்லத்தில் முதியோருக்கு உணவு!

## ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. வழங்குகின்றனர்!

சென்னை, நவ.30-

கழக இளைஞரணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49-வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு ஆலோசனைக்கிணங்க இன்று (30.11.2025) மதியம் 12.30 மணிக்கு மேற்கு மாம்பலத்தில் உள்ள காக்கும் கரங்கள் இல்லத்தில் முதியோர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

கிழக்கு பகுதி கழக செயலாளரும், தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயநகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., மாவட்ட துணை செயலாளர் கோடம்பாக்கம் ‘மு.சத்யா’, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி., 132வது வட்ட கழக செயலாளர் ந.மோ.முரளி மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் உமாசங்கர் ‘அஸ்வின்குமார் மற்றும் பகுதி அமைப்பாளர் மணிரத்தினம், 132-வது வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.



இராயபுரம் மேற்கு பகுதி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். இதில் ந.மனோகரன், கி.ராஜேந்திரன், நா.சண்முகம், எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், இரா.பாலன் எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், பாலா, லட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், லட்சுமிவேலு, ஏ.சாந்தகுமார், மாவட்ட பிரதிநிதிகள் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் வட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.